# தங்கத்தின் விலை இப்படியே தொடருமா?



தங்கம் என்பது எல்லா நாடுகளிலும் காலங்காலமாகப் போற்றப்படும் ஒரு சொத்து. நாம் எப்போதும் அதை பொக்கிஷமாக கருதுகிறோம்.

இன்றைய நவீன உலகில், சுத்தமான தங்கம் (24 காரட்) டிராய் அவுன்ஸ்களில் அளவிடப்படுகிறது. விலை உயர்ந்த தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களை அளவிடும் அலகான ஒரு டிராய் அவுன்ஸ் என்பது, 31.3 கிராம் ஆகும்.

உலக தங்க கவுன்சிலின் அதிகாரப்பூர்வமான சர்வதேச விலையானது எப்போதும் ஒரு டிராய் அவுன்ஸ் படி அமெரிக்க டாலர்களில் இருக்கும். ஆறு மாதங்களுக்கு முன்பு, ஆகஸ்ட் 2024ல், எல்லா வகையான சொத்துக்களின் விலைகளும் (வீடு, நிலம் மற்றும் உலோகங்கள் உட்பட பொருட்கள்) உயரத் தொடங்கியபோது ஒரு டிராய் அவுன்ஸ் தங்கம் விலை 2 ஆயிரத்து 454.85 டாலர்களாக இருந்தது.

இந்தியாவில், 22 காரட் தங்கத்திற்கான தேவை அதிகம் உள்ளது. நகைகள் செய்ய 22 காரட் தங்கமே பயன்படுத்தப்படுகிறது. ஆகஸ்ட் 2024ல் ஒரு கிராம் தங்கம் விலை ரூ.6 ஆயிரத்து 430 ஆக இருந்தது. நேற்று ஒரு கிராம் தங்கம், 8 ஆயிரத்து 230 ரூபாய்க்கு விற்பனையானது. ஆறு மாதங்களில் தங்கத்தின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

## உயர்வுக்கு காரணம்

அமெரிக்காவில் குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் 2024 ஆகஸ்ட்டில் அறிவிக்கப்பட்டதிலிருந்து, அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற தன்மைகள் உலகை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

அவரது பிரச்சார வாக்குறுதிகள் கார்ப்பரேட் வரியை 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைப்பதன் மூலமும், பிற நாடுகளிலிருந்து உயர்தர நுகர்வோர் பொருட்களை உற்பத்தி செய்யும் அமெரிக்க நிறுவனங்கள், அமெரிக்கா திரும்பி வர தூண்டுவதன் மூலமும் அமெரிக்காவை மீண்டும் சிறந்ததாக்குவது அவரது குறிக்கோள்.



முனைவர் டி.கே. ஜயராமன்

அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்யும் பெரும்பாலான பொருட்களுக்கு உலக நாடுகள், அமெரிக்காவின் குறைந்த பட்ச 3 சதவீத வரியை விதிப்பதை பாராட்ட மனமில்லாத டிரம்ப், அமெரிக்காவின் மோட்டார் பைக், போர்பன் விஸ்கி முதலிய இறக்குமதிகள் மீதும் 150 சதவீதம் வரை வரி விதிப்பதன் மூலம் அமெரிக்காவின் தாராள மனப்பான்மையை துஷ்பிரயோகம் செய்கின்றன என்று குற்றம் சாட்டினார்.

நம்மிடம் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு என்ன வரி விதிக்கப்படுகிறதோ, அந்த நாட்டு பொருட்களுக்கு அமெரிக்காவில் அதே அளவு வரி விதிக்கப்படும் என்று தேர்தலில் பிரச்சாரம் செய்த டிரம்ப், அதிபரானதும் செயல்படுத்தத் தொடங்கினார்.

இதனால், டாலரின் மதிப்பு உயர்ந்தது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் குறுகிய கால (ஒரு வருடம் மற்றும் அதற்கும் குறைவான) முதலீடுகளை இந்தியாவிலிருந்து வெளியேற்றத் தொடங்கினர்.

## நம்பகமான சொத்து

நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிக்கத் தொடங்கியது. முழு உலகமும், தங்கம் ஒன்றை மட்டுமே நம்பகமான சொத்தாக கருதுகிறது. உலக நாடுகளின் மத்திய வங்கிகளும், தங்கள் நாட்டு நாணயத்தின் மதிப்பை தக்க வைக்க, தங்கத்தை வாங்கிக் குவித்து வருகின்றன.

அதனால், 2024 ஆகஸ்ட்டில் ஒரு டிராய் அவுன்ஸ் 24 காரட் தங்கத்தின் விலை 2 ஆயிரத்து 454.85 டாலர்களாக இருந்தது. டிரம்ப் அதிபரான பிறகு கடந்த பிப்ரவரியில், அது, 2 ஆயிரத்து 841 டாலராக உயர்ந்தது. கடந்த 19ம் தேதி, 3 ஆயிரத்து 37.94 டாலர்களாக உயர்ந்தது.

## தொடர்ந்து உயருமா?

மத்திய வங்கிகளின் குறைந்த வட்டி விகிதங்கள், பலவீனமான டாலர் மதிப்பு மற்றும் மத்திய வங்கிகளில் இருந்து அதிகரித்து வரும் தங்க கொள்முதல் ஆகிய மூன்றும் தொடர்ந்தாலும், குறிப்பாக புவிசார் அரசியல் பதட்டங்கள் தொடர்ந்தாலும் தங்கத்தின் விலை மேலும் உயரக்கூடும் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இந்தச் சூழலில், அமெரிக்க ரிசர்வ் வங்கி நடவடிக்கைகள், அமெரிக்க டாலரின் திசை, தங்கத்திற்கான முக்கிய காரணிகளாக தொடரும்.


கட்டுரையாளர்
ஆசிய வளர்ச்சி வங்கியின் முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர். அவரது இணையதளம்: www.tkjayaraman.com